# கிருபையுள்ள வார்த்தை®

**GRACIOUS WORD** Luke 4:22


Vol - 15 | November நவம்பர் | 2014

ஆண்டு சந்தா ரூ. 100/- | தனிப் பிரதி ரூ. 9/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-






கௌரவ ஆசிரியர் Betty Choate

ஆசிரியர் பிலேமோன் ராஜா


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

# பரிசுத்தமாயிருங்கள்



**P.C. பிலேமோன் ராஜா**
ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை

அன்பு வாசகரே ! உங்கள் அனைவருக்கும் பரிசுத்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயராலே வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இம்மாதம் உங்களுடன், ஒரு கேள்வியோடே செய்தியை ஆரம்பிக்க விரும்புகிறேன்.

நீங்கள் பரிசுத்தமானவரா? உங்களில் ''பரிசுத்தவான்கள்'' எல்லாரும் கைகளை உயர்த்துங்கள் என்று கேட்டால், அநேகர் கைகளை உயர்த்த மாட்டோம். இச்செயல், நாம் பரிசுத்தத்தைப் பற்றி சரியாக புரிந்துகொள்ளவில்லை என்பதையே காட்டுகிறது. சிலர், துறவிபோல சாயல் உடையவரே 'பரிசுத்தவான்' என்று நினைக்கின்றனர். மேலும் சிலருக்கு, பரிசுத்தவான் என்றால் எப்பொழுதுமே விடாமல் பைபிளைப் பற்றி பேசுபவரோ, படித்துகொண்டிருப்பவரோ 'பரிசுத்தவான்' என்று நினைக்கின்றனர். வேறு சிலருக்கு, யார் ஒருவர் பாவமில்லா பூரணராக இருக்கின்றாரோ அவரே தன்னை பரிசுத்தவான் என கோரமுடியும் என நினைக்கின்றனர். அல்லது நீங்கள், 'ஒரு அதீத ஆவிக்குரிய நபர் என்று அடையாளப்படுத்துபவரையே 'பரிசுத்தவான்' எனலாம்.

## பைபிள் கூறுவது என்ன ?

பிரியமானவரே கவனியுங்கள் ! பைபிள், நாம் ஒவ்வொருவரும் பரிசுத்தமாக இருக்க வேண்டும் என விரும்புகிறது (1 பேதுரு 1 : 13 –16). இது, ஒவ்வொருவரும் தங்களால் முடிந்தால் செய்ய வேண்டிய ஒன்றில்லை. கட்டாயம், அனைவரும் பரிசுத்தமாக இருக்க வேண்டும். இங்கு 15ம் வசனம் இரண்டு விஷயங்களைக் கூறுகிறது. ஒன்று, நம் கடவுளைப் போல நாம் பரிசுத்தராக இருக்க வேண்டும் ; மேலும், நம் நடக்கைகள் எல்லாவற்றிலேயுமே, நாம் பரிசுத்தமாக இருக்க வேண்டும். கொலே 3 : 12 கூறுகையில் "நீங்கள் (கிறிஸ்தவர்கள்) தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் ..." என்கிறது. அதாவது நாம் அனைவருமே பரிசுத்தமாக இருப்பதற்காகவே தெரிந்துகொள்ளப்பட்டோம். அது மட்டுமன்றி, கடவுளுடைய ஆலயம் பரிசுத்தமானதென்றும், நாம் தான் அந்த ஆலயம் என்றும் 1 கொரி 3 : 17ல் வாசிக்கிறோம். ஆம் ! பிரியமானவர்களே, நாம் பரிசுத்தமாக இருக்க எவ்வளவு தூரம் மெனக்கெடுகிறோம் அல்லது சிரத்தை எடுக்கின்றோம். ஏனெனில், பரிசுத்தம்

என்பது நமக்கு விதிவிலக்கல்ல ; மாறாக, கட்டளை!

**சரி, பரிசுத்தமென்றால் என்ன ?**

அதாவது, பாவத்திலிருந்து பிரித்து வைக்கப்படுவது ; ஆகையால், தேவனுக்காக அற்பணிக்கப்பட வேண்டும். இங்கே நாம் கவனிக்க வேண்டியது என்னவெனில், பாவத்திலிருந்து பிரிந்த ஒருவர் பரிசுத்தமாக மட்டுமே இருக்க முடியும். இரண்டில் ஒரு நிலைதான் சாத்தியம். மாறாக, நடுநிலை(Neutral) என்று ஒன்று கிடையாது. ஒருவர் பாவத்துடன் இருந்துகொண்டு பரிசுத்தமாகவும் (தேவனுடன்), அல்லது பரிசுத்தத்துடன் (தேவனுடன்) இருந்துகொண்டு பாவத்துடனும் இருக்கக் கூடாது.

**சரி, பரிசுத்தமென்றால் எதுவல்ல என்றால்,**

1) ஒரு நல்ல மனசாட்சி என்பது மட்டும் பரிசுத்தமாகாது. உதாரணமாக, பவுலைப்பற்றி நாம் பைபிளில் பார்த்தோமானால், அவர் ஆண்டவரின் சபையை துன்பப்டுத்தினபோது தன் மனசாட்சிபடி குற்றமற்றவராக இருந்தார். அது பரிசுத்தமானவர்களின் செயல் அல்ல. (2) சேவை செய்வதோ உதவி செய்வதோ மட்டும் பரிசுத்தம் ஆகாது. யாரோ பசியில் இருப்பவருக்கு உணவளித்துவிட்டால், அது மட்டுமே பரிசுத்தமாகாது. (3) நம்மைப் பற்றிய ஒரு நல்லெண்ணம் மட்டும் பரிசுத்தமாகிவிடாது, மேலும், (4) ஒரு நல்ல ஒழுக்கமான வாழ்வென்பதும் பரிசுத்தமாகாது.

> நம்முடைய ஆராதனைகளில்
> (தொழுகை), தேவன் விரும்புவது
> இருக்க வேண்டுமே தவிர
> மனிதர்கள் விரும்புவது அல்ல !
>
> ---
>
> பரிசுத்தம் என்பது
> மனிதனின் நிலையல்ல ;
> மாறாக, அது வாழ்வின் வழி !

**சரி, அப்படியானால் நாம் எவ்வாறு பரிசுத்தமாக இருக்க முடியும் ?**

பைபிளின் பழைய ஏற்பாட்டு காலத்தில், எவ்வாறு பரிசுத்தமாக இருந்தனர் (அல்லது) பரிசுத்தம் எவ்வாறு அடையாளப்படுத்தப்பட்டது? யாத்திராகம புத்தகத்தில் சுமார் 70 முறை, மோசே பரிசுத்தத்தைப் ப்ற்றி பேசுகிறார். இவ்வார்த்தையானது முதலில், யாத் 3 : 5ல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அங்கு மோசே பரிசுத்தமான பூமியில் நின்றிருந்தார். இதே வேண்டுகோள் யோசுவாவிடமும் வைக்கப்பட்டது (யோசுவா 5 : 15). சரி, அப்படியானால் மற்ற எல்லா இடத்தையும் (பூமி) விட இந்த இரண்டு இடங்களுக்கு என்ன விஷேசம்? யாத் 12:16ல் இஸ்ரவேல்களுக்கு

சொல்லப்பட்டது என்னவெனில், முதல் மற்றும் ஏழாம் நாளில் பரிசுத்த சபை கூடுதல் இருக்க வேண்டும் என்பதே! மேலும், ஓய்வுநாளும் பரிசுத்த நாளாக இருக்க வேண்டியிருந்தது. ஏன் இந்த நாள் மற்ற நாட்களை விட வித்தியாசமானது? மேலும் இறுதியாக, இஸ்ரவேல் தேசமும், பரிசுத்த தேசம் என்று அழைக்கப்பட்டது. இதிலும் இஸ்ரவேல் தேசத்தை மற்ற தேசத்தினின்று வித்தியாசப்படுத்தியது எது?

இங்கே மேலே நாம் பார்த்த அனைத்து காரியங்களிலுமே, நம் தேவன் சாதாரணமானதை எடுத்து அவைகளை பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். முதல் சம்பவத்தில் பார்த்த அந்த இடமானது (மோசே மற்றும் யோசுவா நின்ற இடம்), அவை தேவனுடன் தொடர்புடையனவயாகையால் பரிசுத்தமானது. மேலும் தேவன் பரிசுத்தப்படுத்தியதால் ஓய்வு நாளும் பரிசுத்தமானது. "... ஆகையால் கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்" (யாத் 20:11). இவை மற்றுமின்றி, தேவன் தன்னுடைய சொந்த ஜனமாக தெரிந்தெடுத்ததினாலேயே இஸ்ரவேல் பரிசுத்த தேசமாக இருந்தது.

இவையனைத்தும் நமக்குப் புலப்படுத்துவது யாதெனில், நம்முடைய தேவனைத் தவிர வேறொன்றும் பரிசுத்தம் இல்லை. ஆகையால் தான், மற்ற அஞ்ஞான மதங்களில் இருந்து, கிறிஸ்தவம் தனித்து உள்ளது. அஞ்ஞான தெய்வங்கள் யாருமே பரிசுத்தத்தின் உதாரணங்கள் கிடையாது; அவைகள் அசுத்தத்தின் சிறந்த முன்உதாரணங்கள். மேலும் அஞ்ஞான தெய்வங்கள் தங்கள் வழிபாட்டாளர்களை பரிசுத்தப்படுத்தவில்லை.

ஆம் பிரியமானவர்களே! நம்முடைய பரலோக தேவன் நம்மை பரிசுத்தப்படுத்தியதினாலேயே நாம் பரிசுத்தமாக இருக்கிறோம் (கொலே 1:21-22). இது எப்படி சாத்தியமானது? கிறிஸ்து, இந்த பரிசுத்தமாவதற்கான விலையை (கடனை) சிலுவையிலே செலுத்தினார். நாமோ அவருடைய இந்த கட்டளைக்கு தாழ்மையுடன் கீழ்படிந்து, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்திலே அடக்கம் பண்ணப்பட்டு, அந்த அவருடைய இரத்தத்துடன் தொடர்பு கொள்கிறோம். அப்பொழுது நாம், கிறிஸ்துவின் சரீரமான சபையிலே அங்கமாக மாறுகிறோம். ஆம்! தேவன் நம்மை தெரிந்தெடுத்தார்; நாம் அவருடைய தேர்வாக மாறினோம்; ஆகையால் பரிசுத்தமானோம் (1பேதுரு 2:5).

**பரிசுத்தமான ஒன்றை அற்பமாக எண்ணாதீர்!**

பாருங்கள்! ஏசா பரிசுத்தமானவன்

தான். ஆனால் அவன், ஒருவேளை போஜனத்துக்காக தன் சேஷ்ட புத்திர பாகத்தை விற்றுப்போட்டதினால் அந்த பரிசுத்தத்தை அற்பமாக்கினான் (எபி 12:16). மேலும், நாதாபும் அபியுவும் செய்த பாவத்தை நினைத்துப் பாருங்கள்! அவர்கள் இருவரும் தேவனுக்கு பலி செலுத்தும் விஷயத்தில் அந்நிய அக்கினியை கொண்டு வந்தனர் (லேவி 10:1). இங்கே நாம் கவனிக்க வேண்டியது, அந்த நெருப்பு எங்கே இருந்து வரவேண்டும் என தேவன் குறிப்பிட்டிருந்தார். அதுதான் அந்த நெருப்பை பரிசுத்தமானதாக மாற்றியிருந்தது. இவர்கள் தேவன் கட்டளையிடாத நெருப்பை கொண்டுவந்ததினால், அவர்கள் தேவனுக்கு கொடுத்தது பரிசுத்தமில்லாத ஒன்று.

இஸ்ரவேல் தேசம் எப்பொழுதுமே பரிசுத்தமான ஒன்றை எடுத்து அதை அற்பமாக மாற்றியது. ''அதின் ஆசாரியர்கள் என் வேதத்துக்கு அநியாயஞ்செய்து, என் பரிசுத்த வஸ்துக்களைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறர்கள் ; பரிசுத்தமுள்ளதற்கும் பரிசுத்த மில்லாததற்கும் வித்தியாசம்பண்ணாமலும், அசுத்தமுள்ளதற்கும் அசுத்தமில்லாததற்கும் உண்டான வேற்றுமையைக் காண்பியாமலும் இருந்து, என் ஓய்வு நாட்களுக்குத் தங்கள் கண்களை மூடிக்கொள்ளுகிறார்கள் ; அவர்கள் நடுவிலே நான் கனஈனம் பண்ணப்படுகிறேன்." (எசேக்கியேல் 22 : 26). "அவர்கள் பரிசுத்தமானதற்கும் பரிசுத்தமல்லாததற்கும், தீட்டானதற்கும் தீட்டல்லாததற்கும் இருக்கும் வித்தியாசத்தை என் ஜனத்துக்குப் போதித்து, அவர்களுக்குத் தெரியப்பண்ணக்கடவர்கள்.'' (எசேக்கியேல் 44 : 23).

அவர்கள், பலிபீடத்திலே பரிசுத்தமில்லாத பலிகளை செலுத்தினார்கள் ; அதாவது தேவன் கட்டளையிடாத ஒன்றை செலுத்தினார்கள். அவர்கள் ஓய்வு நாளை புறக்கணித்து, அதை மற்ற நாட்களை போல மாற்றினார்கள். ''ஆகையால் நான் யூதாவின் பெரியவர்களைக் கடிந்துகொண்டு : நீங்கள் ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிற இந்தப் பொல்லாத செய்கையென்ன ?" (நெகேமியா 13 : 17). ''நீ என் பரிசுத்த வஸ்துக்களை அசட்டைபண்ணி, என் ஓய்வுநாட்களை பரிசுத்தக்குலைச்சலாக்கினாய்.'' (எசேக்கியேல் 22 : 8). சுருக்கமாக சொன்னால், அவர்கள் தேவனுடைய கட்டளைகளை சாதாரணமாக எடுத்து கொண்டு, அவற்றிற்கு கீழ்படியாமற்போனார்கள். தேவனுடைய பரிசுத்த கற்பனைகளை அவர்கள் சாதாரணமாக எண்ணினார்கள்.

## நாம் செய்ய வேண்டியது என்ன?

நாம் தேவனுக்கு செய்யும் ஆராதனை (தொழுகை), சேவைகளில் பரிசுத்தமாக இருக்க வேண்டும் (1 பேதுரு 2 : 5). கிறிஸ்தவர்கள் அனைவருமே ஆசாரியர்களாக இருப்பதினால் ஆவிக்குரிய பலிகளை அவர்கள் அனைவரும் செலுத்தியே ஆக வேண்டும். மேலும் பழைய ஏற்பாட்டு ஆசாரியர்கள் பரிசுத்தமில்லாத பலிகளை பரிசுத்தமில்லா வழியிலே செலுத்தி, அதின் புனிதத்தன்மையை கெடுத்ததைப்போல, இன்று நாமும் செய்யக் கூடும். ஆகையினால், தேவன் ஏற்றுக்கொள்ளும் பலிகளை மட்டுமே இன்று நாம் செலுத்த வேண்டும். நம்முடைய ஆராதனையில் (தொழுகை) இருந்து உலகத்தை தள்ளி வைக்க வேண்டும். நாம் சபையாக கூடிவரும்போது பரிசுத்த ஸ்தலத்திலே இருக்கிறோம், ஏனெனில் தேவன் அங்கே இருக்கிறார். நாம் தேவனுக்கு முன் வரும்போது, அதை பயத்துடனும் மரியாதையுடனும் செய்ய வேண்டும். மேலும் நம்முடைய ஆராதனைகளில் (தொழுகை), தேவன் விரும்புவது இருக்க வேண்டுமே தவிர மனிதர்கள் விரும்புவது அல்ல ! பாடல்பாடுவது பரிசுத்தமானது ; ஏனெனில் தேவன் அதை பரிசுத்தப்படுத்தியுள்ளார்.


மேலும் நாம், தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்படிவதினால் மட்டுமே அதை பரிசுத்தமாக வைத்து கொள்ளமுடியும். “ நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம். ( 1 கொரி 3 : 16 - 17). தேவனுக்கு முன் பரிசுத்தமாக இருக்க விரும்பினால், உலகத்தை பின்னுக்கு தள்ளுங்கள். “ ஆனபடியால் நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.(2 கொரி 6 : 17).

அநேக வேளைகளிலே நம்முடைய பரிசுத்தமற்ற வாழ்வினாலே, பிற மார்க்கத்தார் மத்தியில் நம் கடவுளின் நாமம் தூஷிக்கப்படுகிறது. பிரியமானவரே ! பரிசுத்தம் என்பது மனிதனின் நிலையல்ல ; மாறாக, அது வாழ்வின் வழி !

நாம் தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்படியும் வரை மட்டுமே பரிசுத்தமாக இருக்கிறோம் (1 யோ 1:6;2:6). நாம் தேவனுக்கு கீழ்படியும்போது அவர் நமக்குள் இருக்கிறார்; ஆகையால் நாம் அவருடன் தொடர்புடையவர்கள்

என்பதால் நாமும் பரிசுத்தமானவர்கள். ''தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள் (வெளி 21:27). இறுதியாக நண்பரே! கிறிஸ்துவின் மூலமே கடவுள் நம்மை பரிசுத்தப்படுத்துகிறார். அப்படியானால் நீங்கள் பரிசுத்தரா? கிறிஸ்துவின் இரத்தத்தினால் ஞானஸ்நானத்தில் கழுவப்பட்டால் மட்டுமே நாம் பரசுத்தமாக முடியும்! நீங்கள் பரிசுத்தமாகும் வாய்ப்பை தவறவிடாதீர்!

– உங்கள் சகோதரன்
**PCPR** (ஆசிரியர்)



## தூய்மை இந்தியா தெரிந்து கொள்வோம் !

தூய்மை இந்தியா **(Swachh Bharat Abhiyan)** திட்டமானது, 2014 அக்டோபர் 2ம் தேதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம், இந்திய தேசத்தின் சுமார் 4041 நகரங்களின் தெருக்கள், கட்டமைப்புகளையும் தூய்மைப்படுத்த அனைவருக்கும் அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது. இதுவே தூய்மைபடுத்துவதற்கான மிகப்பெரிய திட்டமாகும். இதுமட்டுமின்றி சுமார் 30 இலட்சம் அரசாங்க ஊழியர்களும் பள்ளி கல்லூரி மாணவர்களும் இதில் பங்குபெற்றனர். இத்திட்டமானது அதின் இலக்கை 2 அக்டோபர் 2019 க்குள் அடைய தீர்மானித்துள்ளது. மேலும் இத்திட்டத்திற்காக சுமார் 62,000 கோடி செலவிடப்பட உள்ளது. நாமும் கூட நம் வீடு, தெருக்கள், பள்ளி / கல்லூரி, வேலைப் பார்க்கும் இடம், திருச்சபை கட்டிடம் ஆகியவற்றின் அனைத்து பகுதிகளையும் (கழிவறை முதற்கொண்டு) தூய்மைப்படுத்தி, இத்திட்டத்தில் இணைவோம்! வாருங்கள் தூய்மையான இந்தியாவை உருவாக்குவோம்!

# நீங்கள் கர்த்தருக்கு பரிசுத்த ஜனம்

## உபாகமம் 7 : 6

**அறிமுகம் :**

அ) இதனால் தான் தேவன், தன்னுடைய ஜனங்கள் மற்றவர்களை கொல்லவும், தோற்கடிக்கவும், விக்கிரக வணக்கத்தாரை விரட்டி விடவும் அனுமதித்தார்.

ஆ) தேவன், தன்னுடைய ஜனமான இஸ்ரவேலர் பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்றார்; அதனால் தான் அவர்கள், மற்ற ஜனத்தாருடன் கலவாமலிருக்க கட்டளையிடபட்டனர்.

இ) இன்றும் தன்னுடைய ஜனங்கள் பரிசுத்தமாக இருக்க வேண்டும் என தேவன் கூறுகிறார்.

ஈ) கடவுளுடைய மக்கள் ஏன் பரிசுத்தமாக இருக்க வேண்டும்?

**I) ஏனென்றால் அவர்கள் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள்.**

அ) உபாகமம் 7:6

ஆ) ஏசாயா 43:10

இ) 1 பேருரு 2:9

**II) ஏனெனில் அவர்கள் தேவனுக்கான மக்கள்.**

அ) உபாகமம் 7:6

ஆ) சங்கீதம் 100:3

இ) 1 பேதுரு 2:10

**III) ஏனென்றால், அவர்கள் ஒரு விஷேமான பொக்கிஷம்**

அ) உபாகமம் 7:6

ஆ) தீத்து 2:14

இ) 1 பேதுரு 2:9

**இறுதியாக :**

அ) நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவரா, தேவனுடையவரா, ஒரு விஷேச பொக்கிஷமா?

ஆ) நீங்கள் தேவனுடைய பரிசுத்தராக இருப்பீரா?

# 24 அந்த மிகப்பெரிய நியாயத்தீர்ப்பு நாள்
## THE GREAT JUDGEMENT DAY



J.C. CHOATE

ஒரு மிகப்பெரிய நாள் வர இருக்கிறது; எந்த ஒரு மனிதனும் இதுவரை பார்த்திராத ஒரு நாள். கணக்குபார்க்கும் ஒரு நாள். இந்த நாள் தெய்வீக மற்றும் மனித காரியங்களை உள்ளடக்கியதாக இருக்கும். தேவன் ஒரு பக்கத்திலும், மறுபக்கத்தில் மனிதனும் இருப்பார்கள்; அதாவது ஒருவர் நியாயந்தீர்க்கிறவராகவும், மற்றொருவர் நியாயந்தீர்க்கப்படுபவராகவும் இருப்பார்கள். இந்த, 'நாட்களுக்கெல்லாம் பெரிய நாளில்' நியாயத்தீர்ப்பு நடைபெறும். இந்த நிகழ்ச்சியைக் குறித்து வேதாகமம் அடிக்கடி போதிக்கிறது; மேலும் இந்த நாளுக்காக ஆயத்தமாகும்படி மனிதன் எச்சரிக்கப்பட்டுள்ளான்; மேலும் அந்த நாள் மட்டும் விளைவை வெளிப்படுத்தும்.

**வரப்போகிற நியாயத்தீர்ப்புக்கு தொடர்புடைய சில உண்மைகளை தயவுசெய்து கவனிப்போம் :**

**1) நியாயத்தீர்ப்பு கட்டாயம் இருக்கும் :** அப்போஸ்தலனாகிய பவுல் கூறும்பொழுது, ***"இப்படியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே".*** (ரோ 14 : 10) என்கிறார். நியாயத்தீர்பென்று ஒன்று இருக்குமா? என சிலர் சந்தேகிக்கலாம்; மேலும் சிலர் வெளிப்படையாகவும், வேண்டுமென்றும் இத்தகைய உண்மையை மறுதலிக்கலாம்; ஆனால் எப்படிப்பட்டவர்களாயினும் ஒரு நாளில் இந்த நிகழ்வுக்கு முன் தங்களை பணிவித்தே ஆக வேண்டும். ***"அந்தப்படி முழுங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும். நாவு யாவும் தேவனை அறிக்கைபண்ணும் என்று என் ஜீவனைக்கொண்டு உரைக்கிறேன் என்பதாய்க் கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது"*** (ரோ 14 :11) என்று அப்போஸ்தலன் கூறுகிறார். ஆம்! நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும் நியாயத்தீர்ப்பு உண்டு.

**2) எல்லாரும் அதில் இருப்பார்கள் :** ***"நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்"*** (எபி 9 : 27) என்று எபிரெய எழுத்தாளர் கூறுகிறார். மரணத்திற்கு பிற்பாடே நியாயத்தீர்ப்பு நடைபெற இருப்பதாலும், மரணம் என்பது எல்லாருக்கும் நியமிக்கப்பட்டிருப்பதாலும், சந்தேகமேயின்றி எல்லாருமே நியாயத்தீர்ப்பு நாளில் வெளிப்பட்டே ஆக வேண்டும். அந்த மிகப்பெரிய நாளில் எல்லாருமே அங்கே இருப்பார்கள். வல்லமையானவனும் எளியவனும், பணக்காரனும் ஏழையும், படித்தவனும்

படிக்காதவனும், பலவானனும் பெலவீனனும், இரட்சிக்கப்பட்டவனும் இரட்சிக்கப்படாதவனும் ஆகிய அனைவருமே இருப்பார்கள். ஆம்! வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கும், மற்றும் வாழப்போகும் அனைவருமே அங்கே இருப்பார்கள். ஒரு ஆத்துமாகூட தப்பிக்கவே முடியாது.

**3. ஒவ்வொருவரும் அவரவர் கிரியையின்படி நியாயத்தீர்படைவார்கள்:** ***"ஏனென்றால் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்"*** (2 கொரி 5:10) என்று வாசிக்கின்றோம். நம்முடைய எல்லா செய்கைகளும் ஆண்டவருக்கு முன்பாக வெளியரங்கமாக உள்ளது; அவருக்கு எல்லாருடைய இருதயமும் தெரியும்; நாம் செய்த ஒன்றுகூட அவருடைய பார்வையில் இருந்து தப்பாது. நீதியான (வசனத்தின்படி

> தங்களிடம் அற்புத சுகம் தரும் வல்லமை உண்டு என்று கூறுபவர்கள் நிலையற்றவர்களாக இருக்கின்றனர், ஏனெனில், அவர்களிடம் ஒருவரை அற்புதமாக மரிக்கச் செய்யும் வல்லமை கிடையாது!

செயல்கள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்படும், ஆனால் தீமையான (வசனத்தால் அங்கீகரிக்கப்படாத) செயல்கள் அனைத்துமே தண்டிக்கப்படும்.

**4. கிறிஸ்துவே நியாயாதிபதி:** ***"மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்றான்"*** (அப். 17:31) என்று வேத வசனம் கூறுகின்றது. ஆகையால் கிறிஸ்துவே நியாயாதிபதியாக இருப்பார். நீதியுள்ள நியாயாதிபதியாக ஆண்டவர் பட்சபாதம் பாராதவராகையால், நாம் பயப்பட வேண்டியதில்லை; மாறாக, அவர் ஒவ்வொருவருடைய செயல்களின்படியே நியாயந்தீர்ப்பார். மனிதன் அவ்வளவு துள்ளியமாக நியாயம் விசாரிக்க முடியாது.

**5. நியாயத்தீர்ப்பு இறுதியானது:** இதை படம்பிடித்து காட்டுகையில் கிறிஸ்து கூறியது, ***"எஜமான் வரும்போது அப்படிச் செய்கிறவனாகக் காணப்படுகிற ஊழியக்காரனே பாக்கியவான்"*** (மத் 25:46). நியாயத்தீர்ப்பின் நேரம் வந்த பின் ஒன்றும் நம்மால் செய்ய முடியாது. மேலும், மனிதன் தீர்ப்பை அடைந்தபின் அதுவே நிரந்தரமாக இருக்கும். தேவன் அருளும் தீர்ப்பின்படியே, இரட்சிக்கப்பட்டவர்களும் இரட்சிப்பை இழந்தவர்களும் அவரவருக்கான தீர்ப்பபை பெறுவர்.

**6. எல்லாரும் வெகுமதி பெறுவர்:** ***"நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?, நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால் பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்?"*** (1 பேதுரு 4:17,18) என்று பேதுரு கூறுகிறார். ஆண்டவருக்கு கீழ்படிகிற யாவருக்கும் ஜீவ கிரீடம் பரிசளிக்கப்படும்; மாறாக, அவருக்கு கீழ்படிய மறுப்போர் எல்லாரும் அக்கினி கடலிலே தள்ளப்படுவார்கள். அங்கே இரண்டு பிரிவுகளான இடம் மட்டுமே உண்டு. இடையில் எந்த நிலையும் இல்லை.

நியாயத்தீர்ப்பு நிச்சயமானதும், நித்தியம் என்பது உறுதியானதும் ஆகும். இது உங்கள் மனதில் இருக்குமானால், நீங்கள் என்ன முடிவு எடுப்பீர்கள்? நண்பனே! வாழ்வு மிகவும் குறுகியது, பரலோகம் மிகவும் அருமையானது, மற்றும் நீங்கள் 'போய் பார்க்கலாம்' என்று நினைப்பதற்கு மேலாக நரகம் மிகவும் சூடானது. இப்பொழுதே தேவனுக்கு கீழ்படியுங்கள்!

# கண்டுபிடிங்க பார்ப்போம்!

### வேதாகம நபர்களையும் அவர்களுடைய தொழில்களையும் பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆக்கில்லா | – | பெண் தீர்க்கதரிசி |
| 2. | தாவீது | – | ராணி |
| 3. | தெபோராள் | – | ஊழியக்காரர் |
| 4. | கொர்நெலியு | – | இரத்தாம்பரம் விற்கிறவள் |
| 5. | எஸ்தர் | – | பிரதான ஆசாரியன் |
| 6. | காய்பா | – | மீன் பிடிப்பவர் |
| 7. | லீதியாள் | – | தேசாதிபதி |
| 8. | பேதுரு | – | மருத்துவர் |
| 9. | காயீன் | – | வரிவசூலிப்பவர் |
| 10. | பிலாத்து | – | கூடாரம் கட்டுபவர் |
| 11. | சகேயு | – | மேய்ப்பன் |
| 12. | பவுல் | – | தீர்க்கதரிசி |
| 13. | லூக்கா | – | நூற்றுக்கதிபதி |
| 14. | எலியா | – | விவசாயி |

கண்டுபிடிக்க கடினமாக இருந்தால், கீழே உள்ள வசனப்பகுதிகளை பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

(1 சாமு 16 : 11 – 13; நியாதிபதி 4 : 4; அப் 10 : 1; 1 ராஜா 18 : 36; கொலே4:14; ரோமர் 1 : 1; ஆதி 4 : 2; மத் 27 : 11 – 13; லூக்கா 19 : 2; மத் 4 : 18; யோவான் 18 : 13; அப் 18 : 2 – 3; எஸ்தர் 2 : 17; அப் 16 : 14)

**- சகோதரி. பெவர்லி கிங்ஸ்லி**

# 23 ஆவியானவர் சாட்சி கொடுக்கச் சொல்லுகிறாரா?

பரிசுத்த ஆவியை நேரடி அபிஷேகமாக இன்றும் பெற்றுக் கொள்வதாகக் கூறு வோரில் கனிசமான பிரிவினர், நகை அணிவது தவறு என்றும், அன்று ஆரோனின் காலத்தில் பொன்கன்று குட்டியை உருவாக்கி வணங்கி இஸ்ரவேலர் விக்கிரக ஆராதனை பண்ணின பாவத்திற்கு உள்ளானதையும் எடுத்துக் கொண்டு, "நகைகளை அணிவதே தவறு" என்று போதிக்கின்றனர், செயல்படுகின்றனர். பெந்தெகோஸ்தே பிரிவினர், தோன்றிய ஆரம்பத் கட்டங்களில் நகை அணிவதை பாவம் என்றும், நகைகளை கழற்றாமல் ஞானஸ்நானம் கொடுக்க மறுத்தும் வந்தனர்; நகை அணிந்திருப்போர் பெந்தெகோஸ்தே ஐக்கியத்திற்குக் கட்டுப் படாதவர்கள் என்றும் பேசிய துண்டு.

நாளடைவில் பெண் எடுப்போரின் கோரிக்கையை நிறைவேற்ற நகைக்குப் பதிலாக பணத்தை பரிமாறிக் கொண்டனர். பண ஆசை எல்லாத் தீங்குக்கும் வேறானது என்று ஆவியானவர் உணர்த்த வில்லையோ? (1 தீமோத்தேயு 6:6-10). மேலும் விசாலமான வீடுகளைக் கட்டுவதும், சொத்துக்களை வாங்கிக் குவிப்பதும், சொகுசுக்காரில் பவனி வருவதும் வயல், வீடு, நிலங்களை வாங்கிப் போடுவதும் தலைக்கு டை அடித்துக் கொள்வதற்கு மட்டும் ஆவியானவர் தடை செய்வதில்லையா? (2 தீமோ 3:1-7).

இஸ்ரவேலர் தங்க நகைகளை விக்கிரகங்களுக்கு பயனபடுத்தியதால் தங்கமே பாவமென்றால், அவர்கள் மண்ணினாலும் மரத்தினாலும் ஆன விக்கிரகங்களையும் கூட பின் சந்ததி தொழுது கொண்டார்கள், அப்போ, மண்ணும் மரமும் இவர்களால் பயன்படுத்தப்படுவது ஏன்? விட்டு விடாலாமே? மாறாக இதில் நாம் சிந்திக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

**பொன் சாபத்துக்குரியதா?**

அப்படியானால் தேவன் அதை ஏன் உண்டாக்கி விளையச் செய்தார்? ஆதியாகமம் 2 : 10 - 12 ல் தேவனுடைய தோட்டமாகிய ஏதேனிலிருந்து ஓடிய முதலாம் ஆற்றில் பொன் விளைந்தது, பிதலோகு, கோமேதகம் போன்ற விலையேறப் பெற்ற கற்கள் இருந்தன. இவர்கள் கூற்றுப்படி பொன்னும், விலையேறப் பெற்ற கற்களும் தேவனால் உண்டாக்கப்பட காரணம் என்ன? ஆவியானவர் இதை அவர்களுக்கு வெளிப்படுத்தவில்லையோ?

மனுஷனுடைய உள்ளிந்திரியங்களை அறிந்திருக்கிற தேவன், இஸ்ரவேலர் பொன் நகைகளால் விக்கிரகங்களை

உண்டு பண்ணுவார்கள் என்று அறிந்திருந்தும் எகிப்தில் அவர்கள் விடுதலை பெற்றுச் செல்லவிருந்த நேரத்தில் மோசே மூலமாக ஜனங்களுக்குச் சொன்னது,'' இப்பொழுது ஒவ்வொருவனும் அவனவன் அயலானிடத்திலும், ஒவ்வொருத்தியும் அவளவள் அயலாளிடத்திலும் வெள்ளியுடமைகளையும், பொன்னுடைமைகளையும் கேட்கும்படி ஜனங்களுக்குச் சொல் என்றார்,'' (யாத்.11:2). "மோசே சொல்லியிருந்தபடி இஸ்ரவேல் ஜனங்களிடத்தில் வெள்ளியுடமைகளையும், பொன்னுடமைகளையும் வஸ்திரங்களைக் கேட்டார்கள். கர்த்தர் ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களில் தயவு கிடைக்கும்படி செய்ததினால், கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார்கள்; இவ்விதமாய் அவர்கள் எகிப்தியரைக் கொள்ளையிட்டார்கள்" (யாத்.11 :35 - 36). இன்று பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறுதாகக் கூறுவோர் தேவனைக் குற்றப்படுத்துகிறார்களா?

சரி, விக்கிரகத்துக்கு பொன் பயன்படுத்தப்பட்ட பிறகு பொன் நகைகளை அப்புறப்படுத்தும்படி ஜனங்களுக்கு கட்டளையிட்டு, அதன் பிறகு எங்குமே என்றுமே தங்கம் பயன்படுத்தப்படாமல் விடப்பட்டதா? இல்லை! இஸ்ரவேல் ஜனங்கள் தொழுகை செய்யவும், பலி செலுத்தவும் கட்டப்பட்ட ஆசரிப்புக் கூடாரங்களிலும் தேவாலயத்திலும் பொன் பயன்பாடு தாரளமாக இருந்தது (யாத். 25 -26 அதிகாரங்கள் மற்றும் 1 ராஜா 7 : 51). அதற்குப் பின்பு பல்வேறு இடங்களில் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பொன்னின் பயன்பாடு இருந்துள்ளது. எனவே 'இந்தக் கூட்ட' ஜனங்களின் அறியாமைக்கு வசன ஆதாரம் என்ன?

> நகை அணிவது தவறல்ல;
> அது அணிவது
> தான் மதிப்பு என நீங்கள்
> எண்ணும்போது, அந்த
> எண்ணமே
> பாவமாகிறது.

கெட்ட குமாரன் திரும்பி வந்த போது, தகப்பனின் அன்புக்கு அடையாளமாக மோதிரம் அணிவித்தார் (லூக். 15 : 22). கிறிஸ்தவ விசுவாசம் பொன்னுக்கு ஒப்பிடப்பட்டது (1 கொரி. 3 : 12 ; 1 பேதுரு. 1 : 7). ஒருவரது பொன்னையாகிலும் தாம் எடுத்துக் கொள்ளவில்லை என்று பவுல் குறிப்பிட்ட போது, விசுவாசிகள் மத்தியில் பொன்னைப் பயன்படுத்தும் பழக்கம் இருந்துள்ளது என்பது தெளிவு! (அப்.20:33).

### பொன்னாபரணங்களைத் தரிப்பதை வசனம் தடைசெய்கிறதா?

''மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களைதத் தரித்துக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்புஉங்களுக்கு

அலங்காரமாயிராமல்'' (1பேது.3:3). இன்றும் பரிசுத்த ஆவியின் நேரடி அபிஷேகம் பெறுவதாகக் கூறுவோர் இந்த வசனத்தைச் சுட்டிக் காட்டி நகை அணியக் கூடாது என்று வசனம் ஆதாரம் அளிப்பதாகக் கூறுகின்றனர். இந்த வசனத்தின் பொருளை நேரடியாக எடுத்துக் கொள்வோமானால், அணியக் கூடாதவை பொன்னாபரணங்கள் மட்டுமல்ல, உயர்ந்த வஸ்திரங்களும் தான். இன்று நகை அணியக்கூடாது என்று போதிப்போர், சூட், கோட்,டை அணிந்து ஆண்கள் அவர்களுடைய போதகர் உட்பட தொழுகைகளில் கலந்து கொண்டு நெஞ்சம் நிமித்தி நடப்பதும், பெண்கள் பட்டுப்புடவை போன்ற விலையேறப்பட்ட வஸ்திரங்களையும் தரித்துக் கொண்டு உலா வருவதும் ஏன்? இவர்கள் தங்கள் மயிரையும் பின்னிக் கொள்ளக் கூடாது அல்லவா?

மேலும் இவைகள் உங்களுக்கு ''அலங்காரமாயிருக்க'' வேண்டாம் என்பதுதான் இவ்வசனத்தின் வலியுறுத்தல். ஒருவர் ஆடம்பரமாக அலங்கரித்துக் கொள்ளுதல் வேறு, எளிமையையும் தாழ்மையையும் மனதின் உள்ளே அணிந்துகொண்டு, முறையான ஆபரணங்களை புறம்பேயும் அணிவது வேறு; வேதாகமம் அதைத்தடை செய்வதில்லை (1பேது3:4).நேரடி கட்டளையும் இல்லை. மாறாக, பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது,'' ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்கலினாலாவது, விலையேறப் பெற்ற வஸ்திரகளினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரங்களினாலும், நாணத்தினாலும், தெளிந்தபுத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக் கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நந்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும்'' என்று எழுதினார். மீண்டும் ஆடம்பரமாக டாம்பீகமாக, அலங்கரிக்க வேண்டாம் என்று சொல்லுகிறதேயன்றி அணியவே வேண்டாம் என்று சொல்லுவதில்லை.

பரலோகமே, உருவகமாக பொன்னையும் உயர்ந்த விலையேறப் பெற்ற கற்களையும் கொண்டிருப்பதாக வெளிப்படுத்தின விசேஷம் 21,22ல் வாசிக்கிறோம். ஆம்! தேவன் பொன்னாபரணங்களுக்கு எதிரியல்ல.

ஒருவர் தானாக முன்வந்து நகை அணிவது தனக்கு ஆடம்பரமாக இருப்பதாக உணர்ந்து அதனை தூக்கி எறிந்தால் அவர் தேவனுக்காக இந்த முடிவை எடுத்தபடியினால் நாம் அதை வரவேற்போம். மாறாக இதை பலவந்தப்படுத்தக்கூடாது. மேலும் பொன்னை நமக்கு பொக்கிஷமாகவும், அதின்மீது நம் இருதயத்தை வைப்பதும் பாவமே! அநேகர் இத்தகைய பாவத்தையே செய்கின்றனர் நாம் கவனமாக இருப்போம்!

**E.A. ஆறுமுகம் (போதகர்)**
திண்டுக்கல்

# விசுவாச வீரர்கள்



- சகோ. P.R. சாமி (பெங்களூரு)

தொடர்ந்து, எபிரேயருக்கு எழுதிய நிருபம் 11 – ம் அதிகாரத்தை எடுத்துக் கொள்வோம். விசுவாச வீரர்கள் நீண்ட பட்டியலில், இன்னும் அனேகரை குறிப்பிட்டிருக்கிறார் அதன் ஆசிரியர். “பின்னும் நான் என்ன சொல்லுவேன்? கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல் என்பவர்களையும், தீர்க்கதரிசிகளையும் குறித்து நான் விவரஞ் சொல்ல வேண்டுமானால் காலம் போதாது. விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள். வாக்குத் தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள். பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன் கொண்டார்கள்; யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்” (எபி 11 : 32-34) என்றார். தேவனிடத்தில் கொண்ட அசைக்க முடியாத விசுவாசத்தினால் இவர்கள் இந்த சாதனைகளை செய்து முடித்தனர்.

இப்பொழுது கிதியோனின் விசுவாசத்தை பாருங்கள். இஸ்ரவேலர், மீதியானியர் நிமித்தம் மிகவும் சிறுமைபட்டு கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள். மீதியானியர் வெட்டுக்கிளிகளைப் போல திரளாய் வருவார்களாம். இஸ்ரவேலிலே ஆகாரத்தையாகிலும், ஆடுமாடுகள், கழுதைகள் எதையும் விட்டுவைக்க மாட்டார்களாம். இப்படி கஷ்டப்பட்டு ஒடுக்கப்பட்ட காலத்தில் கர்த்தர் மனமிரங்கி கிதியோனை அழைத்து, இரைவேலரை மீதியானியர் கைக்கு தப்புவிக்கும்படி கூறினார். கிதியோன் தேவனுடைய வாக்குதத்தங்கள் மீது நம்பிக்கை வைத்து, இப்பெரிய சாதனையை செய்து முடித்தான். அதுவும் வெறும் 300 பேர்களை வைத்துக்கொண்டு எதிரிகளை முறியடித்து, இஸ்ரவேலர்களை காப்பாற்றினான்.

கிதியோன் என்பவருடன் விசுவாச வீரர்கள். பட்டியலிலே பாராக், சிம்சோன், யெப்தாவும் இடம் பெறுகின்றனர். இஸ்ரவேலர்களை ஆள ராஜாக்கள் அமர்த்தப்படுவதற்கு முன்பு, இவர்கள் இஸ்ரவேலர்களுக்கு பிரச்சனை வந்த காலத்தில் உறுதுணையாக நின்றவர்கள். கானானிய ராஜாவாகிய யாபீனுக்கு எதிராக பாராக் செல்ல, தெபேராள் என்ற தேவனுடைய

தீர்க்கதரிசியை நாடினான். பிறகு பாராக், யாபீனின் சேனாதிபதியாகிய சிசெராவையும், அவர்கள் படைகள் அனைத்தையும் முறியடித்து, இஸ்ரவேலரை அந்த கானானியர் கைக்கு தப்புவித்தான். சிம்சோன், விசுவாச வீரர்களிலே மிகவும் பலசாலி. மனித சக்திக்குஅப்பாற்பட்ட பலம் அவனுக்கு இருந்தது. இஸ்ரவேல் மக்களுக்கு எதிரிகளான பெலிஸ்தியர் கூட்டத்திற்கு இவன் ஒரு சவாலாக இருந்தான். அவன் காதலி தெலிலாள். அவனை சிறுமைபடுத்தி, பெலிஸ்தியர் கையில் ஒப்பு கொடுத்தாள். சிறையிலிருந்து சிம்சோன் வரவழைக்கப்பட்டு பெலிஸ்தியர் எல்லாரும் கூடிவந்திருக்க, அவர்கள் விக்கிரக தேவனுக்கு பலி செலுத்தும் நாளிலே கண்குருடான அவனை வேடிக்கை செய்ய ஆரம்பித்தனர்.

இங்குதான் சிம்சோனின் விசுவாசம் வெளிப்படுகிறது. கண்களை இழந்த நிலையில், இந்த ஒருமுறை மீண்டும் பலத்தை கொடுக்க வேண்டுமென்று தேவனிடத்தில் மன்றாடுகிறான். தேவன் இரங்கினார். அவர்கள் கூடிவந்திருந்த மண்டபத்தை தாங்கி நிற்கிற இரண்டு நடுத் தூண்களில் ஒன்றை தன் வலது கையினாலும், மற்றொன்றை தன் இடது கையினாலும் பிடித்துக்கொண்டு, என் ஜீவன் இந்த பெலிஸ்தியரோடே கூட மடியக்கடவது என்று சொல்லி பலமாய்ச் சாய்க்க, அந்த வீடு அதில் இருந்த பிரபுக்களின் மீதும், எல்லா ஜனங்கள் மீதும் விழுந்தது. உயிரோடிருக்கும் போது அவனால் கொல்லப்பட்டவர்களைப் பார்க்கிலும் அவன் சாகும்போது கொல்லப்பட்டவர்கள் அதிகமாயிருந்தார்கள் என்று வேதம் கூறுகிறது.

> விசுவாசிகளுக்கு உபத்திரவம், துன்பம் வந்தது. ஆனால் தேவனை மறுதலிப்பதைக் காட்டிலும், மரணத்தை தெரிந்து கொண்டனர்.

யெப்தாவும் இஸ்ரவேலை நியாயந்தீர்த்த, நியாயாதிபதிகளில் ஒருவன். ஒரு வேசியின் பிள்ளை என்ற காரணத்தால் தன் தகப்பனுடைய வீட்டிலிருந்து, தன் ஒன்று விட்ட சகோதரர்களால் துரத்தப்பட்டு, தோப் தேசத்தில் குடியிருந்தான். வீணரான மனுஷர் யெப்தாவோடே கூடிக்கொண்டு அவனோடே கூட யுத்தத்திற்குப் போவார்கள். இருப்பினும் யெப்தா பலத்த பராக்கிரமசாலியாயிருந்தான் அம்மோன் புத்திரர் இஸ்ரவேலர்களை. கலங்கடிக்கப் பண்ணிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு விரோதமாக யுத்தம் செய்ய, யெப்தா

அழைக்கப்பட்டான். இவன் ஒரு முட்டாள் தனமான ஒரு பொருத்தனை பண்ணினதால், இவன் ஒரே மகள் கன்னியானவள் அதற்கு பலியானாள். தன் விசுவாசத்திற்காக, யெப்தாவும் நினைவு கூறப்படுகிறான். தேவனிடத்திலும், தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர்களுக்காக நீதியை சரிகட்டும் நோக்கத்திலும் யெப்தா மிகுந்த நம்பிக்கை உடையவனாக காணப்பட்டான்.

அடுத்தபடியாக, இஸ்ரவேல் இராஜக்களில் ஒருவனான தாவீது தேவன் வாக்குதத்தம் பண்ணின கானான் தேசத்தை, இஸ்ரவேல் மக்கள் பெறுவதற்கு உதவியாக ராஜ்யத்தை விஸ்தரித்தான். தாவீது ஒரு அறிவுள்ள வழி நடத்துனன். இருப்பினும் அவன் வாழ்வு பாவத்தால் கறைப்பட்டது. உண்மையான மனந்திரும்புதலினால் தேவ மன்னிப்பை பெற்றான். சரீர வளர்ச்சி குன்றியவன். தன் பிள்ளைகள் பாவத்தினாலும், தன் மகன் அப்சலோமின் கலகத்தாலும் நொருக்கப்பட்டு போயிருப்பான். எவ்வளவு பெரிய பாவத்தை செய்தவனாக இருந்தாலும், தேவனிடத்தில் மனந்திரும்பி வரக்கூடும் என்பதற்கு ஒரு அழகிய எடுத்துக்காட்டு தாவீதுதான். ஆகவே தான் தேவனுடைய இருதயத்துக்கேற்றவன் என்று புகழப்பட்டான்.

அடுத்தபடியாக, இஸ்ரவேலின் கடைசி நியாயாதிபதியான சாமுவேல் தீர்க்கதரிசியும் இந்த விசுவாச வீரர் பட்டியலில் இடம் பெறுகிறான். சுமார் 40 வருடம் இஸ்ரவேல் மக்களை, நீதியாக நியாயம் விசாரித்தான். தன் முதுமைப் பருவத்தில் மிகவும் துன்பத்தினை அனுபவித்தவன். இஸ்ரவேல் மக்கள், மற்ற சுற்றியுள்ள நாடுகளைப் பார்த்து தங்களுக்கும் ஒரு ராஜா வேண்டுமென்றனர். ஜனங்கள் உண்மையிலே, சாமுவேலை தள்ளுதல் செய்யவில்லை. இதுவரைக்கும் தங்களுக்கு ராஜாவாயிருந்த தேவனை புறக்கணித்தனர். தன்னை குறித்து சாட்சி கொடுக்க வேண்டுமென்று அவர்களைப் பார்த்து கேட்டபோது, அவர்கள் கூறியது, நீர் எங்களுக்கு அநியாயம் செய்யவுமில்லை, இடுக்கண் செய்யவுமில்லை; ஒன்றும் ஒருவர் கையிலும் வாங்கவில்லை என்றார்கள். சாமுவேல் 40 வருடம் ஒரு ஆசாரியனாகவும், நியாயாதிபதியாகவும் இருந்து அவர்களை வழி நடத்தினான். தேவனை தள்ளி, தங்களுக்கென்று ஒரு ராஜாவை ஏற்படுத்திக் கொண்டால், என்ன அபாயங்கள் வரும் என்பதை அவர்களுக்கு சொல்லியிருந்தும், எங்களுக்கு ஒரு ராஜா இருக்கத்தான் வேண்டும் என்றார்கள்.

# 3 ஒரு கல்லறை சம்பவமும், மனமாற்றங்களும்

## A Graveyard Tale and Conversions

பிரியமான வைத்தியனான லூக்கா (கொலே 4 : 14), அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தை எழுதினார். இந்த நல்ல வைத்தியர் தன்னுடைய புத்தகத்திலே ஒரு கல்லறை சம்பவத்தை பதிவு செய்துள்ளார் ; மேலும் அதைத் தொடர்ந்து திரளான ஆண்களும் பெண்களும் மனமாற்றம் அடைந்தனர்.

இந்த சம்பவத்தின் பிரதான விளக்கங்களில் ஒன்று : "உண்மை சம்பவங்களின் தொகுப்பு" என்பதே. அனனியா மற்றும் அவருடைய மனைவியாகிய சப்பிராளின் மரணத்தைப் பற்றிய நம்முடைய பிரியமான வைத்தியரின் பதிவானது, முழு வரலாற்றிலும் உள்ள இப்படிப்பட்ட சம்பவங்களில் எல்லாம் மிகவும் முக்கியமானதாகும்.

### அந்த கல்லறை சம்பவம்...

''அனனியா என்னும் பேருள்ள ஒருவனும் அவனுடைய மனைவியாகிய சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்றார்கள். தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, ஒரு பங்கைக் கொண்டுவந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான். பேதுரு அவனை நோக்கி: அனனியாவே நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடைய தாயிருக்கவில்லையோ? அதை விற்றபின்பும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான். அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்கவே, விழுந்து ஜீவனை விட்டான். இவைகளைக் கேள்விப்பட்ட யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று. வாலிபர் எழுந்து அவனைச் சேலையில் சுற்றி வெளியே எடுத்துக்கொண்டுபோய் அடக்கம் பண்ணினார்கள். ஏறக்குறைய மூன்று மணி நேரத்துக்குப்பின்பு அவனுடைய மனைவி நடந்ததை அறியாமல் உள்ளே வந்தாள். பேதுரு அவளை நோக்கி: நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள்? எனக்குச் சொல் என்றான். அவள் ஆம் இவ்வளவுக்குத்தான் என்றாள். பேதுரு அவளை நோக்கி: கர்த்தருடைய

ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? இதோ உன் புருஷனை அடக்கம்பண்ணின வர்களுடைய கால்கள் வாசற்படியிலே வந்திருக்கிறது. உன்னையும் வெளியே கொண்டுபோவார்கள் என்றான். உடனே அவள் அவனுடைய பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டாள். வாலிபர் உள்ளே வந்து, அவள் மரித்துப்போனதைக் கண்டு அவளை வெளியே எடுத்துக் கொண்டுபோய் அவளுடைய புருஷனண்டையிலே அடக்கம் பண்ணினார்கள். சபையாரெல்லாருக்கம் இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று. அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது. எல்லாரும் ஒருமனப்பட்டுச் சாலொமோனுடைய மண்டபத்தில் இருந்தார்கள். மற்றவர்களில் ஒருவரும் அவர்களுடனே சேரத் துணியவில்லை. ஆகிலும் ஜனங்கள் அவர்களை மேன்மைப்படுத்தினார்கள். திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள். பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும் கட்டில்களின்மேலும் கிடத்தி பேதுரு நடந்துபோகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள்" (அப். 5:1-15).

நம்முடைய இருதயம் தேவனை விட்டு, நகை, அலங்கரிப்பு, பணம் பொருள் நோக்கி செல்லும் போது, நாம் அதைவிட வேகமாக நரகத்தை நோக்கிச் செல்கிறோம்.

## அவர்கள் செய்த பாவம் என்ன?

அனனியாவும் சப்பீராளும் அவர்களது நிலத்தை விற்றதில் கிடைத்த விலை முழுவதையும் கொடுக்க விரும்பவில்லை. ஆனால், அப்போஸ்தலரிடத்தில் ஒரு பகுதியை மட்டும் கொடுத்து விட்டு, இது விற்றதின் முழு பங்கையும் கொடுத்தாக பொய் கூறினார்கள்.

தன் கணவன் மரித்து அடக்கம் செய்யபட்டதை அறியாது அண்ணியாவை போலவே சப்பீராளும்

பொய் பேசினாள். அவளும் பொய் பேசியவுடன் மரித்தாள்.

அனனியாவை அடக்கம் பன்னின வாலிபர்கள், அவளையும் அடக்கம் செய்தனர். இந்த வாலிபர்களுக்கு இது ஒரு வித்தியாசப்பட்ட வேலையாக இருந்தது ! எருசலேம் சபையின் வாலிபர்களுக்கு வித்தியாசப்பட்ட வேலைகள் இருந்தன !

## அந்த கல்லறை...

அந்த வாலிபர்கள் அனனியா, சப்பீராளின் சரீரத்தை எங்கே அடக்கம் செய்தனர் என்று பரிசுத்த எழுத்தாளர் குறிப்பிடவில்லை. அவர்கள் சரீரம் அடுத்தடுத்து அடக்கம் செய்யப்பட்டது என்று மட்டும் குறிப்பிட்டுள்ளார்.

அடக்கம் சம்பந்தமான சடங்குகள் எதுவும் நடத்தப்பட்டதாக தெரியவில்லை. அவர்கள் கல்லறையில் பூக்கள் வைக்கப்பட்டதாகவும் விவரம் இல்லை. அவர்கள் கல்லறையில் ஏதாவது வாசகம் பதிக்கப்பட வேண்டும் என்றால் இது சரியாக இருந்திருக்கும்,

*பொய் பேசி மரித்த*

*இருவரின் சரீரம் இங்கே*

*அடக்கம் பன்னப்பட்டிருக்கிறது...*

*அவர்களுடைய கர்த்தர்*

*சிலுவையில் விலைகொடுத்த பின்பும்*

*பாவம் தன்*

*விலையை எடுத்துக்கொண்டது.*

ஏவப்பட்ட மனிதர்கள் மூலமாக, தேவனுடைய வல்லமையினால் தேவ சித்தம் வெளிப்படுத்தப்பட்ட காலங்களில், அவர்கள் அந்த தேவ செய்தியை உறுதிப்படுத்த அநேக அற்புதங்களை செய்தனர். ஆனால், தேவனுடைய புதிய பிரமாணம் வெளிப்படுத்தப்பட்ட பின், தேவனுடைய திட்டபடி அற்புதங்கள் முடிவடைந்தன.

பாருங்கள், அனனியா மற்றும் சப்பிராள் ஆகியோரின் மரணமானது தெளிவாக அற்புதமானதே! எந்த வல்லமையினால் பேதுரு, சிலரை மரணத்தினின்று உயிர்த்தெழுப்பினாரோ, அதே வல்லமையினாலேயே அனனியாவும் சப்பிராளும் மரித்தனர் !

தங்களிடம் அற்புத சுகம் தரும் வல்லமை உண்டு என்று கூறுபவர்கள், நிலையற்றவர்களாக இருக்கின்றனர். ஏனெனில் அவர்களிடம் ஒருவரை அற்புதமாக மரிக்கச் செய்யும் வல்லமை கிடையாது! இன்னும் அநேக அற்புதங்களும், அடையாளங்களும் அப்போஸ்தலருடைய கரங்களினால் நடைபெற்றன.

ஆனால், அனனியா மற்றும் சப்பிராளின் அற்புதமான மரணத்திற்கு பின், நம்முடைய பிரியமான வைத்தியரான லூக்கா எழுதியது என்னவெனில், “சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும், மிகுந்த பயமுண்டாயிற்று” (அப் 5 : 11).

சில போதகர்கள் மற்றவர்களைவிட மிகவும் உணர்ச்சிவசப்படக் கூடியவர்கள். சத்தியத்தை போதிக்கும் முறையிலே, எல்லா பிரசங்கிமாரும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டியதில்லை. ஒருவர் பிரசங்கிக்கும்போது உணர்வுப்பூர்மாக அதிகம் பேசவேண்டியிருக்கும் என நான் உணருகிறேன். ஜனங்கள் இரட்சிக்கப்பட தேவனுடைய சுவிஷேசத்தை கற்றுக்கொண்டு அதற்கு கீழ்படிய வேண்டும் என நமக்கு நன்றாக தெரியும். ஆனால் அதை செய்வதற்கு உணர்வுப்பூர்வமான காரணங்கள் நிச்சயம் இருக்க வேண்டும்.

நியாயத்தீர்ப்பின் நேரம் வந்த பின், ஒன்றும் நம்மால் செய்ய முடியாது. மேலும், மனிதன் தீர்ப்பை அடைந்தபின் அதுவே நிரந்தரமாக இருக்கும்.

லூக்கா எழுதிய, இந்த கணவன் மனைவியின் கல்லறை சம்பவத்தை கேட்ட சபை முழுவதும், மற்றும் அநேக ஜனங்களுக்கு பயமுண்டானது என்பது ஒரு பலமிக்க உணர்வுப்பூர்வமான சூழ்நிலையே!

இந்த சம்பவத்தை கண்ட சிலர் இப்படி கூறலாம், ‘‘நீங்கள் கிறிஸ்துவின் சபைக்கு தயவுசெய்து போகாதீர்கள் ! அங்கே போனால் சாக நேரிடும்” என்று கூறலாம். ஆனாலும், அனனியா மற்றும் சப்பிராளின் மரணம் மற்றும் அடக்கம் போன்ற பயமுறுத்தும் சம்பவங்களை தொடர்ந்து, “திரளான புருஷர்களும் ஸ்தீரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்” (அப் 5 : 14), என்பது தான் உண்மை!

இன்றைய கருத்தாளர்களில் சிலர் இதைப்பற்றி என்ன சொல்வார்கள் என்று நான் ஆச்சர்யப்படுகிறேன்? இவர்களில் சிலர் அங்கே இருந்திருந்தால் இப்படித்தான் சொல்லியிருப்பார்கள், ‘‘திரளான ஜனங்கள் இரட்சிக்கப்பட்டார்களா? ஆஹா, இது உணர்ச்சிவசத்தின் வெளிப்பாடே!”

இதைப்போன்று ஒரு சாகடிக்கும் சம்பவத்தை இன்று சபையில் நடத்திக் காட்டினால், அந்த உணர்வுப்பூர்வமான சூழ்நிலையினால் இன்று ஜனங்கள் கிறிஸ்துவுக்குள் வருவார்களா என்பது சந்தேகத்திற்குரிய ஒன்றே!

## விசுவாசித்தவர்கள் சேர்க்கப்பட்டனர்...

இந்த தொடர் பாடத்தில் உள்ள முந்தைய பகுதியில் எழுத்தாளர் வலியுறுத்திய விஷயம் என்னவெனில், இரட்சிப்பின் அர்த்தத்தில் விசுவாசித்தல் என்பதின் அர்த்தமானது, சுவிஷேசத்தின் உண்மையை இருதயமோ மனதோ ஏற்றுக்கொள்வது மட்டுமல்ல, மாறாக, சுவிஷேசத்தின் கட்டளைகளுக்கு இருதயத்திலிருந்து கீழ்படிவது ஆகும். இந்த சத்தியமானது அப்போஸ்தலர் புத்தகத்திலும் புதிய ஏற்பாட்டின் மற்ற பகுதிகளிலும் தெளிவான ஒன்றாகும்.

ஆண்டவருடன் சேர்க்கப்படுதல் என்பது, கிறிஸ்துவினுடைய சபையில் சேர்க்கப்படுதலாகும்.

---

நம்முடைய தேவனைத் தவிர வேறொன்றும் பரிசுத்தம் இல்லை.

அப் 2:41ல் பரிசுத்த எழுத்தாளர் கூறுகையில், தங்கள் பாவ மன்னிப்பிற்காக மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறும்படி யாரிடமெல்லாம் கூறப்பட்டதோ, அவர்களில் சுவிசேஷத்தை விசுவாசித்த அனைவரும் (அப் 2 : 38), வசனத்தை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்று, அன்று சுமார் மூவாயிரம் ஆத்துமாக்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். அப் 2 : 47 கூறுவது என்னவெனில், அப்படிப்பட்ட மக்கள் எல்லாம் சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களின் காலத்தில், ஒரு இரட்சிக்கப்பட்ட விசுவாசி ஆண்டவருடைய சபையின் ஒரு அங்கத்தினராக இருந்தார்.

கிறிஸ்துவுக்குள் இருப்பது என்பது அவருடைய சபையில் இருப்பது ஆகும் (கொலே 1 : 2; 3 : 15 ; 1 : 18). அதேப்போன்று, ஆண்டவருடன் சேர்க்கப்படுதல் என்பது கிறிஸ்துவினுடைய சபையில் சேர்க்கப்படுதலாகும் (அப் 5 : 14).

ஆம் ! உண்மை என்னவெனில், லூக்காவினால் பதிவு செய்யப்பட்ட கல்லறை சம்பவமானது, திரளான ஆண்களும் பெண்களும் மனம்மாற்றம் அடைய காரணமானது.

## ஆசிரியரின் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

**நவம்பர்** 3ம் வாரம் – திண்டுக்கல்

4ம் வாரம் – பாண்டிச்சேரி

**டிசம்பர்** 1ம் வாரம் – கொச்சின்

2ம் வாரம் – ஷில்லாங் (மேகாலயா)

கௌகாத்தி (அஸாம்)

நமது ஆசிரியரின்

பிரயாணங்களுக்காக ...

உடல் ஆரோக்கியத்திற்காக ...

அந்தந்த பகுதியின் நடைபெறும்

வகுப்புகளுக்காக, கூட்டங்களுக்காக ...

அநேகர் இரட்சிக்கப்பட ...

தேவைகள் சந்திக்கப்பட ...

# Gospel Through Media by World Evangelism Team

- **Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :**
  Every Sunday 6.45 - 7.00 a.m and Every Friday 6-00 a.m . - 6-30 a.m.
  (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431)***
- **Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV**
  Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m.
  and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382
- **Arjunan in Tamil on Tamilan TV & Radio :**
  TV : Every Monday 6.00 - 6.15 a.m. and Every Saturday 6.15 - 6.30 p.m.
  Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio.
  (TAMILNADU Contact Mobile : 94435 58041)
- **Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :**
  Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m.
  **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m.
  (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)
- **P.R. Swamy & Douglas in Tamil on Radio :**
  Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band
  of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)
- **P.K. Varghese in Malayalam on JaiHind TV**
  Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.
  (KERALA Contact Mobile : 94470 35465)
- **Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :**
  Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.
  (NEW DELHI Contact Mobile : 098108 96789)

# பொய் சொல்லுதல்

ஏனோ சில காரணங்களுக்காக, ஜனங்கள் தாங்களாகவே தங்கள் மனதில் பாவங்களை இரண்டு வகையாக பிரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதாவது பெரிய பாவம் மற்றும் சின்ன பாவம். கொலை, விபச்சாரம், குடிபோதை போன்றவை பெரிய பாவங்கள் என்றும், பொய் பேசுவது போன்றவை சிறிய பாவத்தில் அடங்கும் என்றும் நினைக்கின்றனர். நீதி 6:16-19 வசனங்களில் தேவன் வெறுக்கின்ற 7 காரியங்களை நாம் வாசித்து பார்க்கையில், 17-ம் வசனத்தில் இப்படியாக வாசிக்கின்றோம், "பொய்நாவு".

நாம் சொல்லிக்கொள்ளும் பெரிய பாவங்கள் எவ்வாறு ஆத்துமாவை நரகத்திற்கு தள்ளிவிடுமோ அதேப்போல் பொய் பேசுவதும் ஆத்துமாவை கொன்றுவிடும் என்பதற்கு இந்த வசனம் ஒன்றே போதுமானது. ஆகவே நாம் 'ஆத்தும கொலைகாரனாகிய' **பொய் பேசுதலை** பற்றிய இந்த உண்மையை நினைவில் வைக்கவேண்டும்.

**முதலாவது பொய்யை கண்டுபிடிக்காதீர்கள்** (Invent). பொய் என்பது தன்னை பிசாசுடன் அடையாளப்படுத்துகிறது. ''அவன் பொய்யனும், பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால்...." என்று யோ 8:44 ல் வாசிக்கிறோம். நாம் எப்பொழுதுமே ஒரு தப்பான எண்ணத்தை உருவாக்க முயலக்கூடாது. ஒரு 'பாதி உண்மை' என்பதும் பொய் தான். அநேகர் பாதி உண்மையை பேசுவதினால் தங்கள் மீதான நல்லெண்ணத்தை கெடுத்து, அவர்களுடைய வார்த்தையை எப்பொழுதுமே நம்பமுடியாதபடி செய்கின்றனர்.

**இரண்டாவதாக பொய்யை ஏற்றுக்கொள்ளாதீர்கள்.** மாற்கு 4:24 ல் இயேசு கூறியது, "....நீங்கள் கேட்கிறதை கவனியுங்கள்...." என்றார். நாம் மற்றவர்களிடம் இருந்து கேட்கும் காரியங்களை எவ்வளவு தூரம் எத்தனை பேர் பரிசோதனை செய்கிறோம் என நான் ஆச்சர்யப்படுகிறேன்? நாம் ஒரு பொய்யை கேட்டிருக்கலாம்! லேவியராகமம் 19:16ல் கூறப்பட்டுள்ள எச்சரிக்கைக்கு இன்றும் செவி கொடுக்கப்பட வேண்டும். அது "உன்

ஜனங்களுக்குள்ளே அங்குமிங்கும் கோள் சொல்லித் திரியாயாக..” என்பதே! மேலும் மத் 12:36,37 இயேசு கூறும்போது, “மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளனாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்”. இவை மிகவும் கவனிக்கப்பட வேண்டிய வார்த்தைகள் தானே! நீங்களும் ஏற்றக்கொள்கிறீர்கள் தானே?

**மூன்றாவதாக, பொய் சொல்ல பயப்படுங்கள்.** கலாத்தியர் 6:7ல் பவுல் கூறுகையில், ‘‘... மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறப்பான்” என்றார். அப்போஸ்தலர் புத்தகம் 5ம் அதிகாரத்தில், அனனியா என்ற மனிதனும் அவனுடைய மனைவியும் இணைந்து பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக பொய் கூறியதினால் அந்த இடத்திலேயே மரணமடைந்தார்கள்! இவையனைத்தும் நமக்கு பொய்க்கு எதிராக தேவனுடைய மனது எப்படிப்பட்டது என்பதை தெரியப்படுத்துகிறது. ஒரு பொய் சொல்லும் நபர், என்னத்தை அறுப்பார் என்பதை வெளி 21:8ல் தெளிவாக கூறப்பட்டுள்ளது, ‘‘... பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்’’, மேலும் நண்பரே! உண்மையை மறைப்பதும் பொய்யே!

அன்பு வாலிப சகோதரனே! சகோதரியே! நீங்கள் பொய்யை உருவாக்குபவரா, பொய்யை பெற்றுக்கொள்பவரா, பொய்யை பரப்புவரா? இந்த கேள்விகளுக்கு பதில் கூறும்போது, உங்களுக்கு நீங்களே பொய் சொல்லாமலும், நீங்கள் உங்கள் தேவனிடம் பொய் சொல்லாமலும் இருங்கள்! தேவன் பொய் நாவை வெறுக்கிறார்.

பாவத்திலிருந்து பிரிந்த ஒருவர், பரிசுத்தமாக மட்டுமே இருக்க முடியும்.

பரிசுத்தம் என்பது நமக்கு விதிவிலக்கல்ல ; மாறாக, கட்டளை !

# 1 இயேசுவும் தேவாலயமும்

அன்புள்ள குட்டீஸ்களுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நீங்கள் அனைவரும் நன்றாக இருக்கவும், படிக்கவும், ஆண்டவருக்கு பிரியமானதை செய்கிறவர்காக இருக்கவும் உங்களுக்காக ஜெபிக்கிறேன். நாம் இந்த முறை ஆண்டவருக்கு பிடிக்காத செயல்களை செய்தவர்களைப் பற்றி தெரிஞ்சுக்கலாமா!

யூதர்களுக்கு பஸ்கா பண்டிகை சமீபமான நாட்களில், ஆண்டவர் இயேசு எருசலேமுக்கு போனார். எருசலேமில் தான் மிகப்பெரிய தேவாலயம் இருந்தது. வருடத்திற்கு மூன்றுமுறை எல்லா யூதர்களும் பண்டிகை கொண்டாட இங்கு வந்துவிடுவது அவர்களது வழக்கம். அந்த நாட்களில் எருசலேம் நகரமே மிகவும் விழாக்கோலமாக இருக்கும்.



ஆண்டவர் இயேசு எருசலேமில் உள்ள தேவாலயத்திற்கு சென்றார். அங்கே அவருக்கு மிகப்பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அது என்ன தெரியுமா? தேவாலயத்திலே ஒரு பக்கம் மாடுகளையும், இன்னொரு பக்கம் ஆடுகளையும் மற்றொரு பக்கம் புறாக்களையும் விற்றுக் கொண்டிருந்தனர். மக்களும் வந்து வாங்கி கொண்டிருந்தனர்.

இதைக் கண்டவுடனே நம்ம ஆண்டவர் என்ன செய்தார் தெரியுமா? கயிற்றினாலே ஒரு சவுக்கை உண்டுபண்ணி, அவர்கள் அனைவரையும், ஆடுமாடுகளையும் தேவலாயத்திற்கு வெளியே துரத்துவிட்டார். அது மட்டுமா, அவர்களுடைய காசுக்களை எல்லாம் கொட்டி பலகைகளை எல்லாம் கவிழ்த்துப்போட்டார். மேலும் அவர்களைப் பார்த்து, இவைகளையெல்லாம் எடுத்துக் கொண்டு போங்கள் என் பிதாவின் வீட்டை (தேவாலயத்தை) கள்ளர் குகையாக ஆக்காதீர்கள்' என்றார்.

குட்டீஸ்! கவனித்தீர்களா? நம்ம ஆண்டவர் இயேசு மிகவும் அன்பானவர். ஆயினும் அவரை இந்த மக்கள் மிகவும் வேதனை

படுத்திவிட்டனர். எதினால் தெரியுமா? பிசுத்தமான தேவாலயத்தை இவர்கள் வியாபார இடமாக்கி அசுத்தம் செய்ததினால். அன்று தேவாலயம் ஒரு இடமாக இருந்தது. இன்று தேவன் நமக்குள்ளே வாசம்பண்ண விரும்புகிறார். ஆகையால், நாம் நம்மை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும்.

உன் கண்ணை, ஆண்டவருக்கு பிரியமானதை பார்க்காமல் ஓயாமல் TVயே (கார்ட்டுன், சினிமார்) பார்த்துகிட்டு இருந்தா, உன் கண்ணை நீ அசுத்தம் செய்கிறாய். அம்மா, அப்பாவை எதிர்த்து பேசும்போது, மற்றவர்களை கேலி பேசும்போதும் உன் வாயை நீ அசுத்தம் செய்கிறாய். மற்றவர்களை அடிக்கும் போதும் கிள்ளும் போதும் உன் கைகளை அசுத்தம் செய்கிறாய். மற்றவர்கள் வைத்திருக்கிற பொருளை பார்த்து பொறாமைபடும்போதும், மனதிற்குள்ளே திட்டும்போதும் உன் இருதயத்தை நீ அசுத்தம் செய்கிறாய்.

நம்ம ஆண்டவர் இயேசு நமக்குள்ளே வாசம்பண்ண, நாம் நம்மை அசுத்தப்படுத்தும் செயல்களை விட்டுவிட்டு தூய்மையான காரியங்களை செய்ய வேண்டும். செய்வோமா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**மனன வசனம்**: 1கொரிந்தியர் 3:17

ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார் தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்.

## பாடம் 2 நூற்றுக்கதிபதி

ஹாய் செல்லங்களா ! எப்படி இருக்கீங்க? உங்கள் எல்லாருக்கும் நமது ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் இந்த அக்காவின் வாழ்த்துக்கள்!

நாம் இந்த முறை, தனது வேலைக்காரானின் மீது அக்கரைகொண்ட ஒரு நூற்றுக்கதிபதியை பற்றி தெரிந்துக்கொள்வோமா?

நமது ஆண்டவர் இயேசு, கப்பர்நகூம் என்ற ஊருக்கு சென்றார். அந்த ஊரில் நூற்றுக்கதிபதி ஒருவர் இயேசுவினிடத்தில் வந்தார். நூற்றுக்கதிபதி என்றால், யார் என்று

தெரியுமா? நூறு படைவீரர்களுக்கு தலைவன். அவர் சொல்வதை தான் அந்த நூறுபேரும் கேட்டு நடக்க வேண்டும். இயேசுவினிடத்தில் வந்த அந்த நூற்றுக்கதிபதி, 'ஆண்டவரே ! என் வேலைக்காரன் திமிர்வாத நோயினால் பாதிக்கபட்டு, மிகவும் கொடிய வேதனைப்படுகிறான். அவனை குணமாக்குங்கள்' என வேண்டினார்.

நம்ம ஆண்டவர் இயேசு அவனிடம், நான் உன் வீட்டுக்கு வந்து அவனை குணப்படுத்துவேன் என்றார். ஆனால் நூற்றுக்கதிபதி என்ன சொன்னார் தெரியுமா ? ஆண்டவரே ! நீங்கள் என் வீட்டுக்குள் வர நான் தகுதியானவன் கிடையாது. நீங்க ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லுங்க, அது போதும் என் வேலைக்காரன் குணமாகிடுவான் என்றார்.



நம்ம ஆண்டவர் இயேசு இந்த வார்த்தைகளை கேட்டபோது, மிகவும் ஆச்சரியப்பட்டு, இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தை காணவில்லை என்று நூற்றுக்கதிபதியின் விசுவாசத்தை பாராட்டினார். ஏனெனில் அக்காலத்து மக்கள் அனைவரும் ஆண்டவர் வந்து தொட்டால் தான் சுகமாகும் என்று நம்பினார்களே தவிர, ஆண்டவருடைய வார்த்தைக்கும் வல்லமையுண்டு என நம்பின மாதிரி தெரியவில்லை.

மேலும் ஆண்டவர் நூற்றுக்கதிபதியை நோக்கி, நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உன் வேலைக்காரன் சுகமாவான் என்றார். என்ன ஒரு அற்புதம் ! அந்த நேரத்திலே அவனுடைய வேலைக்காரன் சுகமானான்.

செல்லங்களா ! கவனிச்சிங்களா? இன்றைக்கும் நிறைய பேர், நோயாளிகளையோ, அல்லது இரட்சிக்கப்படாதவர்களையோ பார்த்து, “ஆண்டவரே இந்த நபரை தொடும்” மேலும், “இவருடைய எலும்புகளை, இருதயத்தை தொடும்'' என்று இப்படித்தான் ஜெபிக்கிறார்கள். செல்லங்களா ஒரு நபரை இரட்ச்சிக்கவோ, குணமாக்கவோ

செய்வது ஆண்டவர் தான் என்றாலும், அதை செய்ய அவருடைய வார்த்தையே போதுமானது. இதை அறிந்து, அந்த நூற்றுக்கதிபதி சொன்னதால் தான் ஆண்டவர் அவரை பாரட்டினார். ஏனெனில் கர்த்தருடைய வார்த்தை வல்லமையுள்ளது. ஆகையால் தான் நாம் தினமும் பைபிள் படிக்கனும், ஒரு வசனமாவது மனப்பாடம் செய்யனும், நீங்க சமத்து. செய்வீங்கதானே ?

**மனன வசனம் :** எபிரேயர் 4 : 12

தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.


**– பிரியா ஆண்டனி**

---

# பாடம் 3 திமிர்வாதக்காரனும் நான்கு நபர்களும்

Hi குட்டீஸ், இந்த முறை இயேசு செய்த ஒரு அற்புதத்தை பற்றி தெரிஞ்சுகொள்ளலாமா?

இயேசு ஒருமுறை கப்பர்நகூம் என்ற ஊரில், ஒரு வீட்டில் இருக்கிறார் அப்படின்னு கேள்விப்பட்ட மக்கள் எல்லாரும் அவரைப் பார்க்க கூடினாங்க. அந்த வீட்டிற்குள் நுழைவதற்குகூட இடமில்லாமல் அவ்வளவு மக்கள் கூட்டம் நின்று, இயேசு போதிச்சதையெல்லாம் கேட்டுக்கிட்டு இருந்தாங்களாம்.



அப்பொழுது, நான்கு அண்ணன்கள் சேர்ந்து, திமிர்வாத நோய் இருந்த ஒரு அண்ணனை படுக்கையில் வைத்து சுமந்துகிட்டு இயேசுவை பார்க்க வந்தாங்க. வாசல் வழியா அவங்களால அந்த அண்ணனை சுமந்துகிட்டு போக முடியாமல், அந்த வீட்டோட மேற்கூரையை பிரிச்சி, அதின் வழியா, அந்த அண்ணனை படுக்கையோட

இயேசுவிற்கு முன்பாக இறக்கினார்கள். இயேசு அந்த 4 அண்ணன்களுக்கு இருந்த விசுவாசத்தை பார்த்து, திமிர்வாதக்காரனை பார்த்து "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" என்றார்.

இதைக் கேட்ட கூடியிருந்தவர்களில் சிலர், 'இவன் யார் பாவத்தை மன்னிக்கிறதுக்கு? அப்படினு இயேசுவை பற்றி மனதில குறை சொல்லிக்கிட்டு இருந்தாங்க. அதை இயேசு அறிந்து பூமியில் பாவத்தை மன்னிக்கிறதற்கு எனக்கு அதிகாரம் உண்டுனு சொன்னாராம்.

இயேசு மீண்டும் திமிர்வாதக்காரனை பார்த்து, நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்கு போ என்று சொன்னார். உடனே அந்த அண்ணன் எழுந்து தன் படுக்கையை எடுத்திட்டு எல்லாருக்கு முன்பாகவும் தன் வீட்டுக்கு போனான். இதை பார்த்த மக்கள் எல்லாரும் ஆச்சரியப்பட்டு தேவனை மகிமைபடுத்தினார்கள்.

பார்த்தீங்களா குட்டீஸ்! முடியாம இருந்த அந்த அண்ணனை அந்த நாலு அண்ணன்களும் சேர்ந்து இயேசுவிடம் கொண்டுபோய் அவனை சுகப்படுத்தினாங்க. அவர்களை மாதிரியே நீங்களும் பண்ணுவிங்கதானே! உங்கள் Friends யாராவது உடம்பு சரியில்லைனா அவங்களுக்காக ஜெபம் பண்ணுங்க. அவர்கள் வீட்ல யாருக்காவது உடம்பு முடியலைனா அவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்க. உங்க Friends Schoolக்கு பென்சிலோ பேனாவோ மறந்து கொண்டு வரலைனா அவுங்களுக்கு கொடுத்து Help பண்ணுங்க. நம்ம ஆண்டவர் இயேசு உதவி செய்கிறவாய் இருக்கிறார். அவரை பின்பற்றுகிற நாமும் அதே போல செய்வோமா?

> ஆண்டவருக்கு கீழ்படிகிற யாவருக்கும் ஜீவ கிரீடம் பரிசளிக்கப்படும்; மாறாக, அவருக்கு கீழ்படிய மறுப்போர் எல்லாரும் அக்கினி கடலிலே தள்ளப்படுவார்கள்.

**மனன வசனம் :** ரோமர் 2:10

எவன்... நன்மைசெய்கிறானோ அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானமும் உண்டாகும்.


**– குயினி பிலேமோன்**

# 4 சூம்பின கையுடையவனைகுணமாக்குதல்

ஹாய் குட்டீஸ் ! உங்களை நம்ம ஆண்டவர் இயேசுவின் பெயராலே வாழ்த்துகிறேன். நீங்கள் ரொம்ப சந்தோஷமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன்.

இந்த இதழ் மூலமாக நீங்கள், நம்ம இயேசு செய்த நன்மையைப் பற்றி தெரிந்துக்கொள்ளப்போகிறீர்கள். தெரிந்துக்கொள்ளலாமா ?

ஒரு முறை ஓய்வுநாளிலே இயேசு ஜெப ஆலத்தில் பிரவேசித்து தேவனை பற்றி சொல்லிக் கொண்டிருந்தார். அப்பொழுது அங்கே வலதுகை சூம்பின பெலவீனமான ஒரு மனுஷன் இருந்தான். அந்த மனுஷனை இயேசு குணப்படுத்துவாரா என்று வேதபாரகரும் பரிசேயரும் அவர்மேல் நோக்கமாயிருந்தார்கள். அவர்களுடைய சிந்தனைகளை இயேசு அறிந்து, அந்த பெலவீனமுள்ள மனுஷனை நோக்கி: நீ எழுந்து, நடுவே நில் என்றார். அவன் எழுந்து நின்றான். அப்பொழுது இயேசு அங்கிருந்தவர்களை நோக்கி: நான் உங்களிடத்தில் ஒன்று கேட்கிறேன் ஓய்வு நாட்களில் நன்மை செய்வதோ, ஜீவனை காப்பதோ, அழிப்பதோ எது நியாயம் என்று கேட்டார். அவருக்கு யாரும் எந்த பதிலும் சொல்லவில்லை.



பின்பு அவர்களெல்லாரையும் சுற்றி பார்த்து, அந்த மனுஷனை நோக்கி: உன் வலது கையை நீட்டு என்றார். அப்படியே அவன் தன் வலது கையை நீட்டினான். உடனே அவன் கை மறுகையைப்போல குணமானது.

குட்டீஸ் ! நம்ம ஆண்டவர் செய்ததை பார்த்தீங்களா ? நன்மை செய்வதற்கு நாள் முக்கியம் அல்ல; வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் நன்மை செய்யனும். நீங்களும், உன் நண்பர்களுக்கும் உன் வீட்டில் உள்ளவர்களுக்கும் ஏதாவது நன்மையை செய்து கொண்டே இருக்கனும். செய்வீர்களா? அப்பா, அம்மா வேலை ஏதாவது சொன்னா செய்யுங்க. இயேசுவை பற்றி நீங்க படித்ததை மற்றவருக்கு சொல்லுங்க. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனன வசனம் :** யாக்கோபு 4:17

ஆதலால், ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்.

அன்பு அண்ணன்
**– அன்பு ஏசுதாஸ்**

## இம்மாதக் கேள்விகள்

1. நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு பரிசுத்த ஜனம் என வாசிப்பதெங்கே?
2. நாமெல்லாரும் யாருடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போம்?
3. கர்த்தருடைய ஆவியை சோதிக்கிறதற்கு ஒருமனப்பட்டவர்கள் யார்?
4. நாம் யாரால் தெரிந்துக்கொள்ளப்பட்ட பரிசுத்தர்கள்?
5. நம்மை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறபடியினால் நாம் எப்படி இருக்க வேண்டும்?
6. பொய்யனும் பொய்க்கு பிதாவுமானவர் யார்?
7. பொய் நாவை கர்த்தர் என்ன செய்கிறார் என்று சாலமோன் கூறுகிறார்?
8. பரிசுத்தமில்லாமல் ஒருவரும் யாரை தரிசிக்க முடியாது?
9. தேவன் நம்மை அசுத்தத்திற்கு அல்ல, மாறாக எதற்கு அழைத்திருக்கிறார்?
10. நாம் ஒருவருக்கொருவர் அவயங்களாயிருக்கிறபடியால் எதை பேச வேண்டும்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-12-2014**

## சிறுவர்க்கான கேள்விகள்



1. தேவாலயத்தில் யூதர்கள் என்ன செய்தனர் ?
2. இயேசு அவர்களை என்ன செய்தார்?
3. இயேசு உன்னுடனிருக்க நீ எவைகளை விட்டுவிட போகிறாய்?
4. நூற்றுக்கதிபதியின் விசுவாசத்தை இயேசு ஏன் பாராட்டினார்?



5. திமிர்வாதக்காரனை நான்கு பேர் எப்படி இயேசுவிடம் கொண்டுவந்தனர்?
6. சூம்பின கையுடையவனை இயேசு எந்த நாளில் சுகமாக்கினார்?
7. நன்மை செய்ய எது முக்கியமல்ல?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-12-2014**

அனுப்ப வேண்டிய முகவரி :

**சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு, அரசரடி
மதுரை - 625 016 செல்: 92 4421 4421

## சென்ற மாத பதில்கள்

| | |
|---|---|
| 1. 1 கொரி 15:33 | 6. ரோமர் 1:21 |
| 2. நீதி 10:5 | 7. 1 தீமோ 6:10 |
| 3. 1 கொரி 2:8 | 8. ஆமோஸ் 4:12 |
| 4. யோவான் 17:14,16 | 9. நெகே 13:26 |
| 5. சங் 119:165 | 10. எபி 10:25 |

## அக்டோபர் மாதம் பதில் எழுதியவர்கள்

1. J. மேரி சாராள் – சமயநல்லூர்
2. J. ரேச்சல் தமிழரசி – மதுரை
3. R. ஞானசிரோன்மணி – சமயநல்லூர்
4. Mrs. ரூபி ஜெபராஜ் – மதுரை
5. D. குளோரி திலகவதி – ஈரோடு
6. Mrs. J. கஸ்தூரி கலாவதி – மதுரை
7. Mrs. மேரி ராஜ் – மதுரை
8. N. ஞானசுந்தரி நாகராஜன் – நெல்லை
9. Mrs. ஸ்டெல்லா வால்டர் – கோவை
10. Mrs. மெர்ஸி ரூபஸ் – சேலம்
11. வின்செண்ட் ஜோஸ் ராஜாமணி – சேலம்
12. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
13. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
14. G. பீட்டர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
15. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
16. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – சேலம்
17. J. ஜோசப் – தூத்துக்குடி
18. K. மோகன் – குமாரபாளையம்
19. Sis. ராஜம்மாள் – திருப்பூர்
20. P. பொன்மணி – தூத்துக்குடி
21. Mrs. A. சந்திரா – மதுரை
22. Mrs. புளோரா சுந்தர் – மதுரை
23. Mrs. ஹெப்ஸி தாமஸ் – படப்பை
24. Mrs. ஜோன் தேவநாயகம் – நெல்லை
25. Mrs. லாரா ரத்னராஜ் – தூத்துக்குடி
26. Mrs. தேவி ராஜாசிங் – திருப்பூர்
27. G. புஷ்பா ஜேம்ஸ் – விருதுநகர்
28. Mrs. புஷ்பா பாலன் – பெங்களூர்
29. Mrs. விஜயா தேவபிரகாஷ் – சென்னை
30. S. சூசைமரியான் – சென்னை
31. R. அலெக்ஸ் ஜெர்சன்ராஜ் – சென்னை
32. Mrs. ரேச்சல் ஜீவகாந்தி – சேலம்
33. Mrs. ஹெலன் திலக் – மதுரை
34. Mrs. மல்லிகா – மதுரை
35. மல்லிகா காலின்ஷ் – சென்னை
36. P. சௌந்தர் பாண்டி – திருமங்கலம்
37. P. இந்திரா பாண்டி – திருமங்கலம்
38. P. சூரியபிரியா – திருமங்கலம்
39. Mrs. புஸ்பராணி – நாமக்கல்
40. R. பால் ஜெயராஜ் – சென்னை
41. Mr. ஆனந்த கதிரோன் – சென்னை

## சிறுவர் பகுதியில் பதில் எழுதியவர்கள்

1. V. வீரராகவன் – கரூர்
2. R. சுஜின் தாஸ் – கன்னியாகுமரி
3. R. கர்மைக்கேல் – சென்னை

## சென்ற மாதம் விடுபட்டவர்கள்

1. V. வீரராகவன் – கரூர்
2. Mr. ரமணி ப்ரெட்ரிக் – விருதாச்சலம்
3. Mrs. ரூபி ஜெபராஜ் – மதுரை
4. Mrs. ஸ்டெல்லா வால்டர் – கோவை

**தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !**